இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணு பயணச் சீட்டு வழங்கும் முறை அனைத்துப் பேருந்துகளிலும் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் 300 கிலோ மீட்டருக்குமேல் இயக்கப்படும் தொலைதூர வழித்தட இயக்கத்தினைச் சீரமைக்கும் சீரிய நோக்கத்தின் அடிப்படையில், தொலைதூர வழித்தடப் பேருந்துகள் இனி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும். இதன் காரணமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 905–லிருந்து 1,761 ஆக அதிகரிக்கப்படுவதை அடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம், திண்டுக்கல், தேனி, காரைக்குடி, கரூர், ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய ஏழு இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என்பதையும்; (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் பொது மேலாளர் அலுவலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற அளவிற்குப் பணிமனைகள் இல்லாததைக் கருத்தில்கொண்டு, சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் தமிழ்நாடு முழுவதும் 25 புதிய பணிமனைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களின் சேவை மேலும் செம்மையுறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சாலைப் போக்குவரத்தை மேம்படுத்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், புதிய பாலங்கள் மற்றும் சாலைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் வேகமான வளர்ச்சியிலும், தொழில் துறையின் துரிதமான முன்னேற்றத்திலும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் சாலைக்

2012 மே 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கட்டமைப்பு வசதி இன்றியமையாததாக விளங்குவதால்தான், ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி முக்கிய பங்கினை வகிக்கிறது.

சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கிராமப்புறங்களுக்குச் சிறந்த சாலை இணைப்பு வசதிகளை அளிப்பதிலும், மாநிலம் முழுவதுமுள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதிலும், இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதிலும், புதிய சாலைகளை அமைப்பதிலும், ஏற்கெனவே உள்ள சாலைகளை அகலப்படுத்துவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாகவும், பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினைக் குறைக்கும் வண்ணமும், புதிய பாலங்கள் அமைத்தல், வட்டச் சாலைகள் அமைத்தல், புறவழிச் சாலைகள் அமைத்தல் உட்பட பல்வேறு சாலைப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

இதன்படி, கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி மாநகரத்தையும், ஸ்ரீரங்கத்தையும் இணைக்கும் வகையில் கட்டப்பட்ட பழமைவாய்ந்த பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதால், அங்கு புதிய நான்குவழிப் பாலம் அமைக்கும் பணியும், அணுகுசாலையில் அய்யன் வாய்க்கால் குறுக்கே ஒரு சிறு பாலம் அமைக்கும் பணியும் மற்றும் சாலை சந்திப்பு மேம்பாடு போன்ற பணிகளும் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

இதேபோன்று, கரூர் மாவட்டத்தில் பசுபதிபாளையம் அருகில் கரூர்–வாங்கல் சாலையையும், நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையையும் இணைக்கும் தரைவழிப் பாலம் பழுதடைந்துள்ளதால், அங்கு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்மட்டப் பாலம் ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாமல்லபுரத்தையும், எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் வகையில் 1,420 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 162 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய வழித்தடம் சிங்க பெருமாள்கோவில், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைப்பாக்கம், பெரியபாளையம்,

புதுவாயல் ஆகிய ஊர்களின் வழியாக காட்டுப்பள்ளி வரை சென்னை எல்லை சாலை, அதாவது Chennai Peripheral Road பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்படி 83.20 கிலோ மீட்டர் புதிய சாலைகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே உள்ள 78.60 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும்.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு முதற்கட்டமாக வட்ட மற்றும் ஆரச் சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்டம் தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகரங்களில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக, நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகளுக்கு புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

மேலும், புதிதாக சாலைகள் அமைகிறபோது அல்லது மேம்படுத்தத் திட்டமிடும்போது, அந்தச் சாலையைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சியடையும் வகையில் சாலைக் கட்டமைப்பு வளையம், அதாவது Road Grid அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் சென்னை வெளிவட்டச் சாலை அமையும் பகுதியில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின்மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன், நகர்ப் பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவிதச் சிரமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்குக் குறைந்த நேரத்தில் சென்றடைய வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் சார்ந்த தொழில்களில் முக்கியத்